RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# பழந்தமிழரின் கூத்துக்கலை அன்றும்! இன்றும்!

**மு. கண்ணன்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் -05, இந்தியா

# The Performing Art of Koothu among the Ancient Tamils: Then and Now

**M. Kannan** [a, *]

[a] Department of Tamil, Sona Arts and Science College, Salem-05, India

* Corresponding Author: Murugeskannan.1989@gmail.com

**ABSTRACT**

Among the various artistic traditions of the ancient Tamils, Koothu (traditional theatrical performance) occupied a prominent place in cultural and social life. Sangam and post-Sangam sources indicate the existence of three major groups of performing artists: the Koothars (actors and dancers), the Pāṇars (musicians who performed using instruments such as the Yāzh), and the Viṟaliyars (female performers skilled in singing and dancing). Among these groups, the Koothars and Viṟaliyars were directly associated with the art of Koothu, performing dramatic and dance-oriented presentations for public audiences. Koothu is a unique art form that simultaneously appeals to both the eyes and the ears by integrating music, dance, acting, and narration. In ancient Tamil society, it served not only as a medium of entertainment but also as a vehicle for cultural expression, social communication, and moral instruction. Through its performative elements, Koothu conveyed social values, historical narratives, and communal traditions to the wider public. The tradition of Koothu has continued into the present day and remains an integral part of Tamil cultural life. It is still performed during temple festivals, community celebrations, and, in certain regions, funeral-related ceremonies. As a living folk tradition, Koothu functions both as a source of recreation and as a means of educating and creating awareness among the people. The enduring presence of this art form demonstrates its cultural resilience and its continued relevance in contemporary society. This study examines the significance of Koothu in ancient Tamil society and traces its continuity and transformation in the modern period. By comparing its historical and contemporary forms, the article highlights the role of Koothu as a dynamic cultural institution that has preserved and transmitted Tamil artistic heritage across generations.

**Keywords:** Koothu, Ancient Tamils, Performing Arts, Folk Theatre, Koothars.

## முன்னுரை

பழந்தமிழர் கலைகளில் கூத்து முக்கிய இடம் பெற்றது. பண்டைக் காலத்தில் கூத்தர் என்றும், பாணர் என்றும் விறலியர் என்றும். மூன்று வகுப்பினர் இருந்தனர். இவருள் கூத்தர் என்பவர் கூத்து நடத்தியும் கூத்து ஆடியும் வந்தனர். விறலியர் என்பவர் பாடியாடி வந்த பெண்கள், பாணர் யாழ் முதலியன வாசித்து வந்த இசைகாரர். இம் மூவருள் கூத்தரும் விறலியருமே கூத்து என்னும் கலைக்கு உரியவர்கள் கண்ணுக்கும் செவிக்கும் ஒருசேர விருந்தளிக்கும் பாங்குடையது கூத்துக்கலை ஒன்றே. கோயில் திருவிழா நிகழ்ச்சிகள், இறப்பு நிகழ்ச்சிகளில் கூத்து இடம்பெறுவது இன்றைக்கும் வழக்கிலுள்ள ஒன்றே. மக்களுக்கு அறிவூட்டுவதாகவும், பொழுது போக்கு அம்சமாகவும் இக் கூத்துக்கலை உள்ளது. பண்டைத் தமிழர் மக்கள் தங்கள் உள்ளம் சோர்வடையும் போது புத்துணர்வு பெறுவதற்காக இத்தகைய கலையைக் கற்றறிந்தனர்.

## கூத்து

கூத்து என்பதற்கு நடனம், நாடகம், குழப்பம், வேடிக்கை என்று செந்தமிழர் அகராதி (ந.சி.கந்தையா.பக்.199) பொருள் கூறுகிறது. கூ உற்று ஸ்ரீ கூற்று - கூத்து. அதாவது கூ என்பது ஒலியாகிய பாடலையும், உற்று என்பது ஆடலையும் குறிக்கும். நடனமும், நடிப்பும் இசையோடு கலந்து அரங்கேற்றப்படுவது கூத்து. நாடகம் என்பது அரங்கினுள் நிகழ்வதென்றும், கூத்து பொது அரங்கில் நிகழ்வது என்றும் கூறலாம்.

கண்வழி முகபாவமும், முகவழி உடல் இயக்கமும், உடலின் இயக்கப்படி கைகளின் அசைப்பும் கை அசைப்பின் தழைவுக்கு ஏற்ப இராகமாகிய பண்ணும், பண்ணின் வரிப்புக்குத் தக்கபடி காலால் தட்டும் தாளமும் தாளமிடும் தாளின் போக்கென்னும் சரிப்படியே கூத்தும் நடைபெறும் (கூத்த நூல் பக்.39)1. திருவள்ளுவர் கூத்து பற்றி ஒரு குறளில் குறிப்பிடுகிறார்.

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்

போக்கு மதுவிளிந் தற்று" (குறள்: 332, அதி. 34:2)

என்னும் குறள் நாடகத்தைப் பற்றியும், அதனைப் பார்க்கப் பெருங்கூட்டம் கூடுவதைப் பற்றியும், அது முடிந்தவுடன் அவர்கள் கலைந்து செல்வதைப்பற்றியும் தெரிவிக்கிறது. 'மரப்பாவை நாணால் உயிர் மருட்டியற்று (குறள்:1020), 'மரப்பாவை சென்று வந்தற்று"(குறள்:1058) என்பது போன்ற குறட்தொடர்கள் பாவைகளை ஆட்டுவிக்கும் பாவைக்கூத்தை நினைத்துப் பாடியவை ஆகும்.2

கூத்தின் வகையான சாந்திக்கூத்தில் ஒருபிரிவான நாடகத்தின் பெயரைக் கூத்தின் பெயராகக் கொண்டு, இயலிசை நாடகமென்பலை முத்தமிழ் என்பர். நாடகம் என்பது இப்போதும் கதை தழுவி வருங்கூத்தையே குறிக்கின்றது.

தமிழில் குணநூல், செயிற்றியம், மதிவாணர் நாடகத்தமிழ் முதலான கூத்து நூல்கள் இருந்தனவென்று சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையால் விளங்கும். ஆனால் இப்போது அவையில்லை. சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதையில், 'இருவகைக் கூத்தின் இலக்கணமறிந்து (12) என்பதற்கு அரும்பதவுரையாசிரியர், "தேசியும் மார்க்கமும் என்னும் அகக்கூத்தின் இலக்கணங்களை அறிந்து என்றும், 'பலவகைக் கூத்து' என்பதற்குப் பலவகைப்பட்ட புறநடங்கள்" என்றும் பொருள் கூறினார். விளக்கத்தில், 'மார்க்கம் என்பது வடுகின் பெயர்' என்றும், நகைக்கூத்து முதலியனவை புறநடங்கள் என்றும் கூறினார்.

இருவகைக் கூத்துக்களை அடியார்க்கு நல்லார், வசைக்கூத்து, புகழ்க்கூத்து, வேத்தியல், பொதுவியல் வரிக்கூத்து வரிச்சாந்திக் கூத்து சாந்திக் கூத்து, விநோதக் கூத்து, ஆரியம், தமிழ் இயல்புக் கூத்து, தேசிக்கூத்து,எனப் பலவகையாகப் பிரித்தார்.

இவர் பல்வகைக் கூத்துக்களை பல்வகையென்பது பகருங் காலை - வென்றி வசையே விநோதமென்றாகும் என்ற மேற்கோளுடன் மூவகையாகப் பிரித்தார். வென்றி யென்பது மாற்றான் ஒழுக்கமும் மன்னன் உயர்ச்சியும் மேற்படக் கூறுவதென்றும், வசையென்பது, பல்வகை யுருவமும் பழித்துக் காட்டும் வல்லமை' என்றும்,விநோதக் கூத்தென்பது, "கொடித்தேர் வேந்தரும் குறுநில மன்னரும் முதலாக உடையோர் பகை வென்றிருந்த இடத்து விநோதங்காணும் கூத்து" என்றும் விளக்கியுள்ளார்.

கூத்திற்குரிய ஆடலை இரண்டுரையாசிரியர்களும் பின்வருமாறு கூறுகின்றனர். அகக் கூத்திற்குரிய ஆடல் கீற்று, கடி, சரி முதலாகத் தேசிக்குரிய கால்களும், சுற்றுதல், எறிதல், உடைத்தல் முதலிய வடுகிற்குரிய கால்களும், உடல், தூக்கு முதலாகிய உடல் வர்த்தனையும் ஆகும். புறக் கூத்திற்குரிய ஆடல் பெருநடை, சாரியை பிரமரி முதலாயினவும் பதினோராடலும் ஆகும்.3

## நாட்டுக் கூத்த

வாழுங் கொடியினையுடைய வள்ளியல்லாத வள்ளிக் கூத்தின் வளம் பலவற்றையும் பெற்ற பட்டணங்களைப் பற்றிப் பெரும்பாணாற்றுப் படை கூறும்

"வாடா வள்ளியின் வளம்பல தருஉ

நாடுபல கழிந்த பின்றை" (பெரும்பாண்.370-371)

இக்கூத்து இழிந்தோர் காணுங் கூத்து எனப்படும். இஃது ஆண்பாற்றுகும் பெண்பாற்கும் பொதுவாயினும் இதனைப் பெண்களே பெரும்பாலும் ஆடுவர். ஆடும்பொழுது நாட்டுக்கு வளமும் கொற்றமும் கொணர்ந்த வள்ளியின் பெருமைகளைப் பாடுவர்.

பொதுமக்கள் வாழ்விற் சிறப்பான இடம்பெற்ற இன்னொரு கூத்து குரவையாகும். இதனை மலைவாழ்நரே அதிகமாக ஆடுவர். ஆண்களும் பெண்களும் இவ்வாட்டத்தில் பங்குபெறுவர். வானையாளவும் மலை உச்சிகளில் கட்குடித்த குறவர் மான்தோற் சிறுபறையின் ஒலிக்கேற்பத் தம் பெண்டிரோடு குரவை அயர்வர்

"நறவுநாட் செய்த குறவர்தம் பெண்டிரோடு

மான்றோற் சிறுபறை கறங்கக் கல்லென

வான்றோய் மீமிசை யயருங் குரவை" (மலைபடு.320-322)

பெரிய மலையின் கண்ணே தோன்றி வளைந்த மூங்கிலால் ஆக்கிய குழாயில் நிரப்பி முற்ற வைத்த கள்ளைப் பருகி, வேங்கை மரத்தையுடைய முன்றிலிலே குரவை அயர்வர்.

பெருமலை

வாங்கமைப் பழுனிய நறவுண்டு

வேங்கை முன்றிற் குரவையுங் கண்டே"(நற்.8-10)

குறிய இறப்பை உடைய சிறிய மனையின்கட் குறமக்கள் வளைந்த மூங்கிற் குழாயின்கண் வார்த்திருந்து முதிர்ந்த மதுவை நுகர்ந்து, வேங்கை மரத்தையுடைய முற்றத்தின்கட் குரவைக் கூத்தாடுவர் எனப் புறநானூறும் கூறும்

"குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்

வாங்கமைப் பழுனிய தேறன் மகிழ்ந்து

வேங்கை முன்றிற் குரவை யயரும்" (புறநா.1-3)

இக் குரவைக் கூத்து நெய்தல் நில மகளிரின் பொழுது போக்காகவும் இருந்தது.

நீலமணிபோலும் பூக்களையுடைய கழிமுள்ளி செறிந்த மணற்குன்றுகள் மிக்க கடற்கரையிலிருக்கும் பரதவரின் மகளிர் ஆடும் குரவைக் கூத்தின் ஓசையை மதுரைக்காஞ்சி குறிப்பிடும்.

"மணிப்பூ முண்டகத்து மணன்மலி கானற்

பரதவர் மகளிர் குரவையொ டொலிப்ப" ( மதுரை.96-97)

தெளிந்த கடற்றிரையின் மேலே பாயும் திண்ணிய திமிலையுடைய வலிய நுளையர் வெம்மையையுடைய மதுவை உண்டு மெல்லிய குரவைக் கூத்திற்கு ஏற்ற தாளத்தை ஆடுவர்.

"தெண்கடற்றிரை மிசைப்பாயுந்து

திண்டிமில் வன்பரதவர்

வெப்புடைய மட்டுண்டு

தண்குரவைச் சீர்தூங்குந்து" (புறநா:3-6)

நெய்தல் மலர்போலும் மையுண்ட கண்ணும் நுண்ணிய சந்தையுடைய பருத்த தோள்களும் பொருந்திய மகளிர் வெண்மணற் குவியற் கண்ணே குரவைக் கூத்தை நிறுவுவர்

"நெய்த லுண்க ணேரிறைப் பணைத் தோட்

பொய்த லாடிய பொய்யா மகளிர்

குப்பை வெண்மணற் குரவை நிறூஉம்"(ஐங்:1-3)

இக் குரவை வரிக்கூத்துறுப்பினுள் ஒன்றாகக் கருதப்படும்.

முருகனால் ஏற்படும் தீமைகளைப் போக்குவதற்குப் பெண்கள் குரவைக் கூத்தை ஆடுவர். கார்காலத்து மலரையடைய குறிஞ்சியைச் சூடி, கடம்பமாலை அணிந்து அழகுபெற்று விளங்கும் முருகனை உள்ளத்திற் செவ்விதமாக நிறுத்தி வழிபட்டு, தம்முட்டமுவிக் கைகோத்து மன்றுகள் தோறும் பெண்கள் குரவைக் கூத்தாடுவர்.

"கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்

சீர்மிகு நெடுவேட் பேணித் தழீ உப்பிணையூஉ

மன்றுதொறு நின்ற குரவை" (மதுரை.613-615)

விழாக்காலங்களில் இக்கூத்துக்கள் ஆடப்பெறுவன.4

## கூத்தர்

கூத்தர் என்போர் எண்வகைச் சுவையம் மனத்திற்பட்ட குறிப்புக்களும் புறத்தே புலப்பட ஆடுதல் தொழில் செய்வோர். இவர்கள் பாரசவரும், வேளாளரும், பிறரும், அந்த ஆடல் தொழிற்குரியோர்களும், பாரதி விருத்தியும் விலக்கியற் கூத்தும், கானகக்கூத்தும், கழாய்க்கூத்தும் ஆடுவோராகச் சாதி வரையறையிலர் எனத் தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல் 91 ஆம் சூத்திரவுரையிலே நச்சினார்க்கினியர் கூறுகிறார். சூடாமணி நிகண்டில் கூத்தர்களின் காரணப் பெயர்களாக நாடகர், கண்ணுளாளர், நடர், வயிரியர்,நிருத்தர், கோடியர், பொருநர், அவிநயர் என்னும் சொற்கள் வருகின்றன. பொருநர் என்போர் கூத்தரின் வேறானவர் எனத் தொல்காப்பியம் (கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், தொல்.பொருள். புறத்திணை 91) கூறுகிறது. ஏர்க்களம் பாடுநர், போர்க்களம் பாடுநர், பரணி பாடுநரெனப் பொருநர் பலவகையினர் என்று நச்சினார்க்கினியரும் கூறுகிறார். பொருநுதல் என்பது ஒத்திருத்தல் என்று பொருள்படும். ஆகையால், தம்மைப் பிறர்போல் கோலம்புரிந்து கொள்வோர் பொருநர். எனவே, பொருநர் என்போர் கூத்தரில் ஒரு வகையினர் என்றும், இவர்களுக்குப் பாடும் தொழிலும் உண்டென்றும் கொள்ளலாம். கூத்தருக்கு ஆகுளி, முழவு, துடியென்பன போன்ற இசைக்கருவிகளுண்டு. தமிழ் நூல்களிற் பத்துப்பாட்டுக்களில் ஒன்றாகிய மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப் படையில் இவர்களைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன.5 முழவு, ஆகுளி, பாண்டில், கொம்பு, குழல, தட்டை, எல்லரி, பதலை, எனப் பல்லியங்களைப் பையிலிட்டுக் கட்டிக் கொண்டு கூத்தராவார் நன்னனின் மலைநாடு நோக்கிச் செல்கின்றனர் என்பதும், கூத்தரை ஆற்றுப்படுத்தும் பாங்கும் மலைபடுகடாத்தால் எடுத்துரைக்கப் பெறுகின்றன.

தமிழகத்தில் அதுவும் மதுரைக் கண் நெடுங்கூத்து மரபொன்று இருந்துள்ளதை மதுரைக் கண்ணங் கூத்தனார், தமிழ்க் கூத்தனார், சேந்தன் கூத்தனார், உறையூர் முதுகூத்தனார், மதுரைத் தமிழ்க் கூத்தன் நாகன் தேவனார் போன்ற புலவர் பெயர்கள் உணர்த்தும். (சங்க இலக்கியத்தில் கலையும் கலைக் கோட்பாடும் முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன் பக்53,157)

(மேலே கூறப்பட்டுள்ள கருத்துக்கள் பழந்தமிழ்ரின் கூத்துக்கலை அன்று காணப்பட்ட நிலையை அறிந்தோம். இதன் பின் கீழே கொடுக்கப்படும் கருத்துக்கள் கூத்துக்கலை இன்றைய சூழலில் தெருக்கூத்துக்கலையாக மக்கள் மத்தியில் காணப்படும் நிலையைக் காண்போம்.)

கூத்துக்கலை இன்றைய சூழலில்

தெருக்கூத்து வரைறை

கூத்து என்பது தெருவில் நிகழ்த்தும் ஒரு கலையாகும். மேடையும் திரையும் கிடையாது, மக்களுக்கு நடுவிலோ தெருக்களிலோ ஒப்பனையுடன் ஆடிப்பாடிச் செல்வதுண்டு. மேலும் தெருக்கூத்து நாடோடிக் கூத்து வகையைச் சார்ந்து. நாடக மேடையோ காட்சித் திரையோ இல்லாமல் எளிய முறையில் தெருவிலும் திறந்த வெளியிலும் பெரும்பாலும் இரவு நேரங்களில் நடைபெறும் என்று தமிழிசைக் கலைக்களஞ்சியம் குறிப்புத் தருகிறது. தெருவில் ஆடியக் காரணத்தால் இப்பெயர் பெற்றிருக்க கூடும். கூத்தாடும் இடத்திற்கு களம் என்றும் களரி என்றும் கூறப்படுகின்றனர். நாட்டுப்புற கலைவடிவங்களில் தெருக்கூத்துக்கலை முக்கியப் பங்கு வகுக்கிறது.

## கூத்து பற்றி அகராதிகள் கூறும் பொருள்

தெருக் கூத்தினைப் பற்றி பல பொருள் விளக்கங்களும் கிடைக்கின்றன. கூத்து என்றால் நாடகம், நடனம், குதித்தல், வித்தாரக்கலி என்று பல பொருளை வரலாற்று முறைத் தமிழ் இலக்கிய பேரகராதயும் மேலும் “முரவாரஇ மரசரனயஇ னயுnஉநஇ னயnஉiபெ” நடனம், ஆடுதுங்கூத்தே, “ஏiநெஇ னயnஉநளஇ நடஉஎநnin ரெஅடிநச” அல்லியம், கொட்டி, குடை, குடம். பாண்டாங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை, என்று தமிழ் லெச்சின் விளக்கம் தருகிறது.6

இதனைப் போன்றே “ஆடம்பரம், நடனம், நாடகம், விளையாட்டு, என்று தமிழ்மொழி அகராதியும் இலயம், கண்ணுள், குரவை, தாண்டவம். தாக்கு. நடம், நடனம், நடை, நட்டம், நாடகம், நாட்டியம் வெறியாடல், வேலளாடல் என வெள்ளி விழா தமிழ்ப் பேரகராதியும் ருத்தம், பழகம், பரணி, பரதம், கூத்து, அணங்கு, ஆஞ்சி, கழங் பொருள் விளக்கம் தருகிறது. இதனை போலவே கலைக் களஞ்சியம் இயல்புக் கூத்து. தேசியக்கூத்து, என பல பொருள்களைத் தருகிறது. வசைக் கூத்து, வேத்தியல், பொதுவியல், வரிக்கூத்து, அவிநயக்கூத்து, பண்டைக் காலத்தில் கூத்தும் நாடகமும் வேறுபாடின்றி வழங்கப்பட்டன. ஆடற்கலையும் நடிப்புக்கலையும் இணைந்தே வளர்ந்துள்ளன. கூத்தின் வளர்ந்த நிலையே நாடகம் என்றும் சிலப்பதிகாரத்தில் கூத்து என்பது நாடகம் என்று வழங்கப்பட்டது.

காலப்போக்கில் நாடகம் என்ற சொல்லே நிலைத்துவிட்டது என நாடகக் களஞ்சியம் விளக்கம் தருகிறது.7

கூத்தினைப் பற்றி அகராதிகள் பல பொருள் விளக்கங்கள் தந்தாலும் பொதுவாக கூத்து என்பதை நாடகம் என்ற ஒரே பொருளைதான் விளக்கமாக தருகின்றது. இதனைக் கொண்டு பார்க்கும் போது கூத்தின் வளர்ச்சியே நாடகம் என்று பொருள்படுகிறது. கூத்து வளர்ச்சியடைந்த நிலை நாடகம் என்பது விளங்குகிறது.

நாட்டுப்புறங்களில் இன்றளவிலும் நாடகம் என்பது மேடையிலோ வண்ணத் திரைகளைக் கொண்டே ஒலி, ஒளி அமைப்புகளுடன் நடத்தப்படுவது வழக்கம். கூத்து என்பது தெருக்களில் இரவு 10 மணிக்கு தொடங்கி காலை 6 மணி வரை நடைபெறுவதாகவோ உள்ளது. மேலும் சுத்தில் வாத்தியங்கள் (இசைக்கருவிகள்) ஜால்ரா, மத்தளம், முகவீனை நாதஸ்சுரம்) ஆர்மோனியம் கொண்டு இசைக்க அந்த தாளத்திற்கு தகுந்தாற் போல கூத்துக்கலைஞர்கள் நடித்துக் காட்டுவதாகவே தெருக்கூத்து அமைகிறது.

## தெருக்கூத்து நிகழ்த்தப்படுவதன் நோக்கம்

தெருக் கூத்தினை நிகழ்த்துவதற்கு சில காரணம் உண்டு பொதுவாக கூத்து என்பது பொழுப்போக்கு கலையாகவும் மக்களுக்கு அறக்கருத்துகளைக் கூறுகின்ற கலையாகவும்தான் இருந்து வருகிறது என பலர் எண்ணி உள்ளனர். ஆனால் பின்வரும் நிகழ்விற்கும் மக்களின் சடங்கு சம்பிர்தாயங்களிலும் சமுதாயத்தோடு பின்னிப் பிணைந்துள்ள கலையாகவே தெருக்கூத்துக் காணப்படுகிறது. பின்வரும் காரணங்களுக்காக தெருக்கூத்து நிகழ்த்தப்படுகின்றன. அவை,

1. திருவிழா நிகழ்வுகளில் -ஆரவல்லி சூரவல்லி
2. மழை வேண்டி-அர்சுனன்தபசு, தவசி
3. பொழுது போக்கு- அண்டா குண்டா நகைச்சுவை கூத்து
4. இறப்பு சடங்குகளில் - கர்ண மோட்சம்

இது போன்ற நிகழ்வுகளில் தெருக்கூத்து நிகழ்த்தப்படுகின்றன. கூத்து விடியும் போது கூத்துக் கதையும் முற்று பெறவேண்டும் என்ற என்பது ஒரு இரவிற்குள் நடத்தி முடிக்க வேண்டியக் கலையாகும். காரணத்திற்காக கூத்துக் கலைஞர்கள் கூத்தினை விறு விறுப்பாக நடித்துச் செல்வர் இதற்கு சான்றாக,

"கூத்தாடி கிழக்கே பார்ப்பான்

கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்"

என்ற பழங்கால பழமொழி உண்டு. அதாவது கூத்தாடி கிழக்கே பார்ப்பான் கிழக்கே பார்ப்பான். கூலிக்காரன் மேற்கே பார்க்க சூரியன் மறையும் மறைந்தால் கூலி வாங்கலாம் என்பதற்காக பார்ப்பான். இக்காரணத்திற்காகவே இப்பழமொழி உருவாயிற்று என்பர்.

தெருக்கூத்துக் கலைஞர்களை மக்கள் கூத்தாடிகள் என்றும் கூத்தர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். நாட்டுப்புறக் கலைகளில் தெருக்கூத்தின் பழமைத் தன்மை மாறாமல் தோன்றிய நாள் முதல் வளர்ச்சியும் பெற்று மக்களிடத்தில் நல்ல வரவேற்பினையும் பெறும் கலையாகவே காணப்படுகிறது.

## கூத்து நூல் கூறுவது

கூத்த நூலை எழுதியவர் சாத்தனார் என்பவர். இவரது ஊர் கூத்தனூர் ஆகும். இலக்கணம் வகுத்த அகத்தியனரிடம் இவர் பாடம் கேட்டவர், தொல்காப்பியருடன் பயின்றவர், எனும் கருத்து வழக்கில் உள்ளது ஆயின் சான்றாதாரங்கள் ஏதும் கிடைக்கவில்லை. என்று கூத்து நூல் தோன்றிய வரலாற்றைக் கூறுமிடத்தில் முனைவர் சே.இரகுராமன் கூறுகின்றார் மேலும், திருவள்ளுவர் திருக்குறள் வழி கூத்துப்பற்றிய குறிப்பு ஒன்றினை குறிப்பிட்டுள்ளார்.

## இலக்கியங்களில் சான்று

சங்ககாலத்தில் கூத்தின் வகைகளையும் ஆட்ட நெறிமுறை கனையும் கூத்தாடும் புலவர் பெருமக்களையும் காணமுடிகிறது காட்சியளித்தான் வேலன் 'வெறியாட்டு' நிகழ்ச்சிக் கூத்து வழி டவுனாகிய சிவன் ஆடல் வல்லவனாக சங்க கால மக்களுக்குக் தெருக்காத்து என்னும் நூலில்

குறிப்பிட்டுள்ளனர். மேலும், சங்ககாலத்தில் நிகழ்த்தப்பட்ட ஒரு வழிபாடே என்று முனைவர் சு.இராசரத்தினம் வாசனே கூத்து நிகழ்த்தியது பற்றிய குறிப்பு உண்டு அத்தி எனும் விளங்கினான். இவனுடைய ஆடல் திறனை வைத்து இவன் ஆட்டனத்தி பெயர் கொண்டிருந்த சேரர் குல மன்னன் கூத்துக்கலைஞனாக ஆதிமந்தி என்று அழைக்கப்பட்டான் ஏன முனைவர் சு.தாமரைப்பாண்டியன் களியலாட்டப் பாடல்கள் என்னும் நூலில் பக்கம் 17ல் குறிப்பிட்டுள்ளார்.

## தெருக்கூத்தின் இன்றைய நிலை

தெருக்கூத்தினைக் கொண்டு சில விளம்பரங்கள், விழிப்புணர்வு பிரச்சாரம், கல்லூரிகளில் பயிற்ச்சி பட்டறை, கருத்தரங்கம் போன்றவைக்கு நெருக்கூத்தினைக் கொண்டு மக்கள் மத்தியில் கலைஞர்கள் நடிக்கப்படுகின்றனர். அப்பொழுதுதான் மக்கள் கூட்டம் அப்படியே குறையாமல் இருக்கும் என்ற காரணத்திற்காகவே, மேலும் பெண்கள் தெருக்கூத்தில் முன்னர் ஆர்வம் கொண்டு திகழ்ந்தனர். ஆனால், தற்பொழுது பெண்களிடத்தே ஆர்வம் குறைந்துக் கொண்டு வருகிறது.(பெண்களுக்கு ஏற்படும் சில உடல் பிரச்சனைகள்)

(தன் நிலையில் மாற்றம் பெற்று பேசக்கூடியக் கலையாக கூத்துக்களை இன்றைய நிலையில் காணப்படுகிறது.)

## முடிவுரை

பழந்தமிழர் கலைகளில் ஒன்றாக விளங்கிய கூத்துக் கலை என்பது மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், பகுத்தறிவு சிந்தனைக்கும். வாழ்வியல் நெறிமுறைகளை விளக்குவதற்கும், பண்பாடு, கலாச்சாரம் உள்ளிட்டவைகளை பேணுவதற்குமான ஓர் கலையாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் பிற்காலங்களில் இக்கலை பல்வேறு வடிவங்களில் உருமாறி அதன் தனித்தன்மையை இழந்த போதும் கூட கிராமப் புறங்களில் அக்கலை பாதுகாக்கப்படுவது சற்றே ஆறுதலான செய்தியாக இருக்கிறது. இனிவரும் காலங்களில் இந்த கூத்துக்கலை அழிவுபடாமல் பாதுகாக்க நாம் கூத்துக்கலையை கற்று அடுத்த தலைமுறையிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

## References

வெ.வரதராசன், தமிழ்ப்பாணர் வாழ்வும் வரலாறும்.

இ. அங்கையற்கண்ணி இசைக்கலையும் இலக்கிய கலையும்

சு. வித்தியானந்தன் (1956) கலைக் களஞ்சியம் தொகுதி நான்கு. ப.177,178, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை. முதற்பதிப்பு.

தமிழ் லெக்சின் அகராதி, (1982) தொகுதி-4, சென்னை பல்கலைக்கழகம், சென்னை.

சி. நயினார் முகமது (1994), நாடகக் களஞ்சியம் விளக்கம்

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License